# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 09 புதன்கிழமை 26.10.2022 கதிர் 353


இனி இது ரகசியம் அல்ல!

இந்தியாவின் கன்னட வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரிட்டிஷ் பிரதமராவது இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'அன்று அவர்கள்; இன்று நாம்!' என்று தலைப்பிட்டிருக்கின்றது ஒரு தமிழகப் ☞2

# கோவைக் கார்க் குண்டுவெடிப்பில் இலங்கை முஸ்லிம்களும் தொடர்பு

## கைதான ஐவரில் இருவர் இந்நாட்டவர்கள் 75 கிலோ வெடி மருந்து வகைகளும் மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்டோபர்26

தமிழகம் கோவையில் ஞாயிறு அதிகாலை இடம்பெற்ற கார் வெடிப்புத் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து முக்கிய சந்தேகநபர்களான முஸ்லிம்களில் இருவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தீவிர விசாரணை நடத்தி வரும் இந்தியப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ☞2



கைதான ஐவர்



கார் வெடிப்பில் உயிரிழந்த அப்துல் காதர் ஜமோ முபீன்

## 3,அரசியல் கைதிகள் சுத்தவாளிகள் என 16 ஆண்டுகள் சிறையின் பின் விடுதலை!

### கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த 16 ஆண்டுகளாக கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டிருந்த - கிளிநொச்சியை சேர்ந்த - மூன்று அரசியல் கைதிகளை கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து அதனடிப்படையில் அவர்களை சுத்தவாளிகளாகக் கருதி விடுதலை செய்து நேற்றுத் தீர்ப்பளித்தது.

அவர்களுக்கு எதிரான ☞11

## சிறையில் இருக்க வேண்டியவர்கள் இப்போது அரசில் இருக்கிறார்கள்!

### சிறீதரன் எம்.பி. கடும் விசனம்



பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தற்பொழுது அமைச்சர்களாக உள்ளனர். இவர்கள் சிறையில் இருக்க வேண்டியவர்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு ☞11

## பொலிஸ் அலுவலர் விபத்தில் உயிரிழப்பு ஆறு பேர் படுகாயம்

அம்பாறை - தெஹியத்தகண்டி பிரதேசத்தில் மஹியங்கனை - பொலன்னறுவை பிரதான வீதியில் மஹியங்கனை நோக்கிபயணித்துகொண்டிருந்த வான் வேக்ககட்டுப்பாட்டை பிழந்து வீதியை விட்டு விலகி நிறுத்திவைக்கப்பட்டிருந்தலுட்டோவில் மோதி இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ☞11

## வெடுக்குநாறி, குருந்தூர் மலைக்கு டக்ளஸ், விஜேதாஸ நேரில் விஜயம்!

### ஜனாதிபதியின் வழிகாட்டலில் இணக்கத் தீர்வு காண முயற்சி

முல்லைத்தீவு குருந்தூர் மலை மற்றும் வவுனியா வெடுக்குநாறி விவகாரங்களை சுமூகமாக தீர்த்து வைக்கும் வகையில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாவது வாரத்தில் அந்தப் பகுதிகளுக்கான நேரடி விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றுக்கு நியாயமான தீர்வை வழங்கும் வகையில், ஜனாதிபதி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் முதலாவது சந்திப்பு நேற்று நடைபெற்றது. ☞11



## தடுப்பில் இருந்த கல்வெவ தேரர் ஆஸ்பத்திரியில்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தங்காலை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ☞11

## மீள மக்கள் அலை ஆர்ப்பரிக்குமாம் நவம்பர் 2இல் என்கிறார் ஹிருணிகா

மக்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு, தனது குடும்பத்தை வளர்க்கும் செயற்பாட்டை ரணில் ராஜபக்ஷ அரசு முன்னெடுக்கிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ☞11



## இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதல்; பெண் ஒருவர் பலி

### 38 பேர் மாவனல்லை வைத்தியசாலையில்

கொழும்பு - கண்டி வீதியின் மாவனல்லை அன்வாரம பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற பஸ் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வளைவு ஒன்றில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ☞11



## முதல் பெண்மணி மைத்திரீ யாழ். பல்கலைக்கு வருவார்

நாட்டின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்க எதிர்வரும் 28 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். ☞2



## பாடசாலை, பல்கலைகழக மாணவர்களுக்கு பால்வினை நோய்களின் பாதிப்பு அதிகரிப்பு!




நாட்டில் பல பாடசாலை, பல்கலைகழக மாணவர்கள் பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக தேசிய எய்ட்ஸ், எஸ்.டீ.டி. கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

பால்வினை நோய்களால் பாதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் இயக்குநர் மருத்துவர் ரசஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

18 முதல் 30 வயதிற்குட்பட்டவர்கள் மத்தியில் நோய் தொற்று அதிகரித்துள்ளது 2021ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் ☞2

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகை. 'நம்மை ஆண்ட பிரிட்டனை, இன்று நம் நாட்டு மருமகன் ஆள்கிறார்' என்று அந்தப் பத்திரிகை பெருமிதம் பேசுகின்றது.

ரிஷி சுனக்கின் பெற்றோர், மாமன் - மாமியார், ஏன் ரிஷி சுனக் தம்பதியர் கூட, வைதிகக் குடும்பத்தவர்கள்தான். முழு இந்துக்கள். அதை முன்னிறுத்தி சமூக ஊடகங்களில் பல விடயங்கள் அலசப்படுகின்றன.

உதாரணத்திற்கு ஓரிரண்டைத் தரலாம் என நினைக்கிறேன்.

இந்துத்துவா நெறியில் நிற்கும் பா.ஜ. கவினரை 'சங்கி' என்று குறிப்பிடுவது தமிழகக் கிண்டல் பாணி.

பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான 10, டௌனிங் வீதி வீட்டின் முன்புறத்தில் வாசல் நிலையில் மாவிலை கட்டி தொங்கவிட்டு, இருபுறமும் பக்கச் சுவர்களில் சந்தன நிறத்தில் சுவாஸ்திக்கா சின்னம் பொறித்த படம் போட்டு, பிரிட்டிஷ் நாட்டின் பிரதமர் ஒரு 'சங்கி' என்று குறிப்பிடும் ஒரு தகவலுடன் ஒரு சமூக ஊடகப் பதிவு வைரலாகப் பரவுகிறது.




இன்னொன்றில் 10, டௌனிங் வீதி இல்லத்துக்கு வெளியே பல செருப்புகள், காலணிகள் ஜோடி ஜோடியாகக் கழற்றிப் பட்டு விடப்பட்டிருக்கும் படம் இடம்பெற்றுள்ளது. உள்ளே போகின்றவர்கள் எல்லோரும் இந்துக்களின் வீட்டில் பாதணியை வெளியே கழற்றி விட்டுப் போவது மாதிரி இனிமேல் பிரிட்டிஷ் பிரதமர் வீட்டிலும் வெளியே காலணிகளைக் கழற்றி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்ற செய்தியை கூறும் சமூக ஊடகப் பகிர்வு அது.

அதே சமயம் 10, டௌனிங் வீதி இல்லத்தில் நேற்று மதிய போசனம் வாழையிலையில், அப்பளம்,சோறு, கூட்டுக் கறியுடன் இப்படி அமைந்தது என லண்டனில் இருந்து நண்பர் ஒருவர் ஒரு படத்தையும் அனுப்பியிருந்தார். அதையும் ஒரு பார்வைக்கு இணைத்துள்ளேன்.

எது, எப்படி என்றாலும், வெள்ளையர் அல்லாத இந்தியப் பாரம்பரிய இரத்தம், வெள்ளையர் தேசத்தை ஆள்வதில் ஒரு பெருமிதம் இருப்பதாகவே எனக்குப் படுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே....?

***

இரண்டொருதினங்களுக்கு முன்னர், கோவை குண்டுவெடிப்பை ஒட்டி 'தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டின மாதிரி' என்று ஒரு கோடி காட்டி இருந்தேன்.

என் ஊகம், எனக்கு முற்கொண்டு கிடைத்த தகவல் - எல்லாம் சரி போலத்தான் தென்படுகின்றன.

ஈஸ்டர் குண்டு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானுக்கு இந்திய - தமிழக - தொடர்புகள் பலமாக இருந்தமை பற்றி பல செய்திகள் ஏற்கனவே வெளியாகிமை தெரிந்ததுதான்.

இப்போதைய கோவைச் சம்பவம், அதை அடுத்த கைதுகள் போன்றவற்றைத் தொடர்ந்து, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பின்னணிகள் பற்றிய புதிய விடயங்கள் கட்டவிழ - அம்பலமாக - வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று இப்போது கிடைக்கும் முதல் தகவல்கள் கோடி காட்டுகின்றன.

வரும் வாரங்களில், முன்னர் நம் நாட்டில் நடந்த விடயங்களை ஒட்டிய பல மர்ம முடிச்சுகள் அவிழக் கூடும். ஆனால் அங்கு வெளியாகும் விடயங்கள் அம்பலமாகுமா, வெளிவருமா அல்லது அப்படியே அமுக்கப்பட்டு விடுமா என்பதுதான் தெரியவில்லை.

- மின்னல் -

## கோவைக் கார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்பில் உயிரிழந்தவரின் வீட்டில் இருந்து 75 கிலோ வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. அதில் சுமார் 55 கிலோ அமோனியம் நைதிரேட்டும் அடங்கும் எனவும் கூறப்பட்டது.

தமிழகம் கோவையில் கடந்த ஞாயிறு (23 ஆம் திகதி) அதிகாலை 4 மணியளவில் முக்கிய இந்து ஆலயம் அருகில் ஒரு கார் ஒன்று திடீரென வெடித்துப் பிளந்தது. இதன்போது காரில் இருந்த ஒருவர் உயிரிழந்தார். அது காரில் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்தது, அது தற்செயலான விபத்து என காலையில் கூறப்பட்டது. எனினும் சந்தேகம் கொண்ட தமிழகப் பொலிஸார் டில்லி வரை அவசர தகவல் வழங்கினர்.

இதனையடுத்து இந்திய தேசிய புலனாய்வுத்துறையினர் நேரடியாக இறங்கித் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். உயிரிழந்தவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த ஐவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐவரில் இருவர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்துல் காதர் ஜமோ முபீன் (வயது 29) என்பவரே காரில் உயிரிழந்தவராவார்.

முகமது தல்ஹா (வயது 25), முகமது அஸாருதீன் (வயது 23) ஆகியோர் உக்கடத்திலும், முகமது ரியாஸ் (வயது 27), பெரோஸ் இஸ்மாயில் (வயது 27), முகமது நவாஸ் இஸ்மாயில் (வயது 26) ஆகிய மூவரும் ஜி.எம். நகரிலும் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

மறுநாள் 24ஆம் திகதி இந்துக்களின் தீபத் திருநாள் பண்டிகையை இலக்கு வைத்து கொண்டு வரப்பட்ட குண்டே தொழில் நுட்பக் கோளாறு காரணமாக முற்கூட்டியே வெடித்ததா என்ற திசையிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோவை பொலிஸ் கொமிஷனர் பாலகிருஷ்ணன் கூறியுள்ளவை வருமாறு:-

கோவையில் கார் சிலிண்டர் வெடித்தது தொடர்பாக தடயவியல் துறை, கைரேகை துறையினரை வரவழைத்து அறிவியல் பூர்வ புலன் விசாரணை நடத்தப்பட்டது. இறந்த நபரை 12 மணி நேரத்தில் அடையாளம் கண்டுபிடித்தோம். வாகனம் 10 நபர்களை தாண்டி கைமாறி வந்த நிலையிலும் விரைவாக உரிமையாளர் கண்டுபிடிக்கப்பட்டார். இறந்து போன நபரைக் கண்டுபிடித்து அவரின் வீட்டில், நீதிமன்றம் அனுமதி பெற்று சோதனை நடத்தப்பட்டது. அதில் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம்.

சம்பவம் தொடர்பாக உதவிக் கொமிஷனர் வீரபாண்டி தலைமையில் விசாரணை நடந்து வருகிறது. 9 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் ஒன்பது தனிப்படைகள் களத்தில் விசாரிக்கின்றன. இதுவரை 22 பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர். புலன் விசாரணை அடிப்படையில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடம் அருகே பொலிஸ் செக்போஸ்ட் இருந்ததால், அந்த வாகனம் மேற்கொண்டு செல்லாமல் அங்கேயே வெடித்திருக்கக்கூடும் என்ற தகவல் கிடைத்துள்ளது.

இந்த சம்பவம் நடந்த உடன், சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கூட்டுச்சதியில் வேறு யார் சம்பந்தப்பட்டு உள்ளனர், யார், யாருடன் தொடர்பு உள்ளது என்பது குறித்து புலன் விசாரணை நடந்து வருகிறது. கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பேரில் மூன்று பேர் ஜமோ முபின் வீட்டில் இருந்து வெடிப்பொருள்களை வெளியே எடுத்துச் செல்லும் சி.சி.டிவி. காட்சியில் இருந்த நபர்கள். ஜமோ முபின் வீட்டில் இருந்து 2 எல்.பி.ஜி. சிலிண்டர்கள், 3 டிரம்களை எடுத்து சென்றனர். அதில் என்னென்ன பொருள்கள் இருந்தன என்பது குறித்து தடயவியல் சோதனைக்கு அனுப்பி உள்ளோம். முபின் வீட்டில் இருந்து கைதானவர்களில் ரியாஸ், நவாஸ், பெரோஸ் ஆகியோர் வெடிக்கக்கூடிய பொருள்களை தெரிந்தே எடுத்து சென்றனர். ஒருவர் ஒருங்கிணைத்துள்ளார். மற்றொருவர் வாகனம் ஏற்பாடு செய்துள்ளார். முபின் வீட்டில் நடந்த சோதனையில் பொட்டாஷியம் நைட்ரேட், அலுமினியம் பவுடர் என 75 கிலோ வெடிப்பொருள்கள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பேரில் ஒருவரான முகமது தல்ஹா என்பவர், கோவை குண்டுவெடிப்பு சம்பவத்தில் மூளையாகச் செயல்பட்ட அல் உம்மா தலைவர் பாஷாவின் உறவினர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் ஏற்கனவே 2019 தேசிய புலனாய்வு முகமை என்.ஐ.ஏ. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள். சிலர் கேரளாவிற்கு சென்று வந்துள்ளனர். அவர்கள் எதற்காக, எப்போது சென்றவர்கள் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. முழு விவரம் கிடைத்த உடன் தகவல் தெரிவிக்கப்படும். சம்பவ இடத்திலும் சுற்றுவட்டாரத்திலும் இருக்கும் சி.சி. டிவி. கேமராக்களில் பதிவான காட்சிகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. - இவ்வாறு அவர் கூறினார்.

## பாடசாலை, ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் 'ஸ்பா'விற்கு செல்வது ஒரு காரணம் என தெரிவித்துள்ள அவர் ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர், அதேவேளை பல யுவதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## முதல் பெண்மணி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

'புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்' (**Shaping the Future in the New Normal**) என்ற தொனிப் பொருளில் நடாத்தப்பட்டு வரும் யாழ். பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தால் 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மநாட்டின் முதன்மை உரையாளராக இலங்கையின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்கே கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன், 'பாலினமும் அரசியலும்' என்ற தலைப்பில் குழு விவாதம் ஒன்றும் இடம்பெறவிருக்கின்றது.

இந்த விவாதத்தின் நடுவராக மருத்துவபீடப் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரனும், பேச்சாளர்களாக கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பவித்ரா ஜெயசிங்கே, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிவஞானம் ஜெயசங்கர், கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சீ.டி.எல்.ஜி செயற்றிட்ட முகாமையாளர் ஜூட் வோல்டன், யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் நடராஜா சுகிர்தராஜ் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

V2 Travels and Tours

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

VISA

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தேடிவரும் ஒன்லைன் கனவுகள் இன்னொருசாரை வீசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சாதிப்பதே புத்திசாலித்தனம்

மிக முக்கியமான காலகட்டத்தில் நாடு நிற்கின்றது.

அரசியல் தரப்புகள் தூர சிந்தனையுடன், தீர்க்கமான சில முடிவுகளை எடுக்க வேண்டிய சமயம் இது.

பொருளாதாரத்தில் மிக மோசமான கட்டத்தை அடைந்து, மீண்டெழ முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் நாடு, தன்னை தூக்கி நிறுத்தக் கூடிய வாய்ப்புகளை எல்லாம் தேடி அலைகின்றது – நாடி நிற்கின்றது – என்பது முழு உண்மை.

தேசிய இனப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு ஒன்றைக் காண்பதுவும் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான ஒரு நிபந்தனை என்பது போன்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

அதேசமயம், கடந்த மூன்று ஆண்டுகளாக எகிறிக் குதித்து, சண்டப் பிரசண்டம் பண்ணி, மேலாதிக்கம் செய்த பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கும் நாட்டின் இந்த வீழ்ச்சி நிலைக்குப் பிரதான காரணங்களில் ஒன்று என்ற யதார்த்தத்தை அந்த மேலாண்மைத் திமிரில் எகத்தாளம் பண்ணிக் கொண்டிருந்த தென்னிலங்கை பௌத்த, சிங்கள பேரினவாத மக்கள் கூட்டமே பட்டுணர்ந்து, ஆழமாகச் சிந்திக்கும் சூழலும் இப்போது வந்துள்ளது.

அதனால் பௌத்த, சிங்களப் பேரினவாதம் இப்போது நீறு பூத்த நெருப்பாக அடங்கிப் போய்க் கிடக்கின்றது. அது மீண்டும் கனன்று எழுவதற்குக் குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளாவதாகும்.

அதற்கிடையில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளை விரைவாகவும், சகல தரப்பினரையும் இணைத்தும், வெற்றிகரமாக முன் நகர்த்த வேண்டும்.

ஆக, சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்களுக்கு இந்த வேளை – சந்தர்ப்பம் – தந்திரோபாயக் காய் நகர்த்தலுக்கு மிக முக்கியமான காலகட்டமாகும்.

தென்னிலங்கைச் சிங்களத் தரப்புகளுக்கு மத்தியிலும், நாட்டின் தேசிய அரசியலிலும் வித்துவத்தன்மையைக் காட்ட முற்படும் தங்களது அகலக்கால் வேலையைத் தமிழ் தலைவர்கள் நிறுத்திவிட்டு, ஒரு வருட காலத்துக்குள் தீர்வை காணும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு உறுதுணையாய் இருந்து, அந்தப் பாதையில் அவரை சரியான வழியில் தூண்டி, நெட்டித் தள்ளி, வழி நடத்துவதற்கான நிலையைத் தமிழ் தலைவர்கள் சுவீகரிக்க முற்பட வேண்டும்.

சிங்களத் தலைவர்களிலும் விட பெரிய அதிமேதாவிகளாக – அதிகப் பிரசங்கித்தனமான அறிவாளிகளாக – தங்களை காட்டி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மல்லுக்கட்டி, ஊடல் கொண்டு, அவருக்குக் காலதடம் போடுவதாக நினைத்து, தமிழர் தரப்புக்கே கால்தடம் போட்டு, 'ஸேம் சைட்' கோல் அடிப்பதை விடுத்து, ஜனாதிபதியுடன் சேர்ந்து ஓடி, காரியமாற்றி, எதையாவது சாதிக்க முடியுமா என்பதைத்தான் தமிழ்த் தலைவர்கள் இப்போது பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பி வைத்தமை, ரணிலுக்குக் கால் தடம் போடுவதன் மூலம் அவர்கள் தங்களின் அதிமேதாவித்தனத்தைக் காட்ட அல்ல. அதிகாரத்தில் இருப்பவர்கள் மூலம் தீர்வு கிட்டுவதற்கு வாய்ப்பு இருந்தால், அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட வேண்டுமே தவிர, தனிப்பட்ட கோபதாபங்கள், வெறுப்புக்கு அல்ல. அவற்றை சுருட்டி வைத்து விட்டு, காரியம் பார்ப்பதுதான் நேர்மையான போக்காக இருக்க முடியும்.

இந்த வாய்ப்பான சந்தர்ப்பத்தை விதண்டாவாதம் பண்ணி குழப்பாமல், சேர்ந்து ஓடி சாதிக்கப் பார்ப்பதே புத்திசாலித்தனம்...! நியாயத் தர்க்கம் புரிந்து, நடுவீதியில் மக்களை தொடர்ந்து நிறுத்துவதை விடுத்து...!

# புரிதலை ஏற்படுத்திக்கொண்டால் பிரிவினைவாதம் தோற்றம்பெறாது!

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளும் தமக்கிடையில் புரிதலை ஏற்படுத்திக் கொண்டால் பிரிவினைவாதம் தோற்றம் பெறா. எனவே எமது ஒற்றுமையை மதத்திலும் , மொழியிலும் வரையறுக்காது செயற்பட வேண்டும் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கிடையிலும் புரிதலுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். வெளவேறு மொழிகள் பேசக்கூடிய மக்கள் வாழும் இந்த நாட்டில் பிரிவினை வாதம் அவசியமா? நாம் அனைவரும் ஒரே கலாசாரத்தின் கீழேயே வாழ்கின்றோம்.

ஒவ்வொருவருக்கிடையிலும் புரிதலை ஏற்படுத்திக் கொண்டால் தற்போதுள்ள மகிழ்ச்சியற்ற நிலைமையை விரைவில் சீராக்க முடியும். நாம் அனைவரும் ஒரே இனமாக மீண்டெழ வேண்டும். மறக்கப்பட்ட கலாசாரங்களை எதிர்கால சந்ததியினருக்குக் கற்பிக்க வேண்டும்.

தீபாவளி தினத்தில் விளக்கேற்றுவதால் மாத்திரம் எம்மால் திருப்தி கொள்ள முடியாது. உள்ளத்தில் பிரகாசத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தப் பிரகாசத்தை சமூகத்துக்கும் வழங்க வேண்டும். எமது ஒற்றுமை மதம் ஒன்றிலோ அல்லது பேசும் மொழியிலோ வரையறுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது. புரிதலுடன் அனைவரும் இணைந்து செயற்பட்டால் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். – என்றார்.

# இலங்கையின் விவசாயத்துறை அபிவிருத்திக்கு முதலீடு செய்வதற்கு இரண்டு நாடுகள் திட்டம்

இந்தியாவும் இஸ்ரேலும் இலங்கையின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக கூட்டாக முதலீடு செய்யத்திட்டமிட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான இஸ்ரேலின் நிறுவனத்து டன் இணைந்து இலங்கையில் விவசாய மையங்களை நிறுவுவதற்கு விவ சாய அமைச்சு இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, அறிவு மற்றும் விவசாயத் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் இஸ்ரேல் தொழில்நுட்ப உதவியை வழங்கவுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு நிதியுதவி வழங்க இந்தியா இணங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பழங்கள், உருளைக்கிழங்கு, நெல் அல்லாத தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் பயிர்களை வளர்ப்பதற்காக ஹொரணை, சீதா–எலிய, மஹில்லுப்பல்லம, அங்குனுகொலபெலஸ்ஸ மற்றும் கன்னோருவ ஆகிய ஐந்து இடங்களை விவசாய அமைச்சு அடையாளம் கண்டுள்ளது.

இதனைத் தவிர, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை அமைக்கும் திட்டமும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தேவை சார்ந்த இலக்குகள், பங்குதாரர்கள், பொறுப்புகள் மற்றும் மையங்களை நிறுவுவதற்கான காலக்கெடு ஆகியவற்றைக் கண்டறிவதற்காக, புதுடில்லியில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்துடன் நேரடி உரையாடலை ஆரம்பிக்குமாறு, இலங்கையின் விவசாய அமைச்சு, புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த முன்னோடி திட்டம் தொடர்பாக இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளனர்.

# பொங்கலுக்கும் ஒரு தொகுதி தமிழ் கைதிகளை விடுவிக்க உள்ளார் என ஜனாதிபதி ரணில் உறுதி!

## மனோ கணேசன் தெரிவிப்பு



தீபாவளி தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டதைப் போல் பொங்கலுக்கு மேலுமொரு தொகுதி தமிழ் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் முகப் புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்த அவர் –

நானும், அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா வும் தமிழ் கைதிகள் விடுவிப்பு பற்றியும் கொழும்பில் பொலிஸ் பதிவு பற்றியும் ஜனாதிபதியுடன் உரையாடினோம்.

பொலிஸ் பதிவு பற்றி மீண்டும் ஒருமுறை ஐஜிக்கு பணிப்பதாக ஜனாதிபதி கூறினார். தீபாவளி தினத்தன்று விடுவிக்கப்பட்டதை போல், பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி கூறினார்.

அருகிலிருந்த பிரதமர் மற்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார, முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க, யோகராஜன் ஆகியோரும் சாதகமான கருத்துக்களைப் பகிர்ந்தனர்.

மலையக மக்கள் மத்தியிலான, பெருந்தோட்ட பிரிவினர் பற்றி நான் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த பிரேரணை பற்றி ஜனாதிபதி அறிந்திருந்தார்.

பெருந்தோட்ட பகுதிகளிலேயே 51 வீத உணவின்மை பிரச்சினை காணப்படுகிறது எனக் கூறினேன். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய, செயலணி ஒன் றை அமைக்கக் கோரினேன். ஜனாதிபதி கொள்கை ரீதியாக உடன்பட்டார். – என மேலும் தெரிவித்துள்ளார்.

## கந்தசஷ்டி சிறப்பு



**பேரரக்கர் தனையழித்த பெருமானே போற்றி
பாருலகில் பேரரக்கர் பெருகுகிறார் நாளும்
தீராத தொல்லையினை கொடுக்கின்றார் தினமும்
சிவன்மைந்தா தீர்வுதந்து காத்துவிடு ஐயா**

**ஊர்சிறக்க உழைக்கின்றார் ஒன்றுங் கிடையாமல்
உளமுடைந்து உணர்விளந்து உழலுகிறார் ஐயா
பாருலகில் கலியெழுந்து ஆடுகிறான் கந்தா
பகையழித்த வேலவனே பொழிந்திடுவாய் கருணை**

**ஆலமதை உண்டானின் அழகு திருக்குமரா
நீலமயில் நீயமர்ந்து எமக்கருள வேண்டும்
சீலமுடை வாழ்வுதனை தந்திடுவாய் முருகா
திருவடியே சரணமையா சிவானாரின் மைந்தா**

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெரும்பாலானோர் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாம்!

## இப்படிக் கூறுகிறார் கோவிந்தன் கருணாகரம் எம்.பி.



22 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு பாதகமும் இல்லாத சாதகமும் இல்லாத நிலை காணப்பட்டதன் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

9 மாகாணங்களுக்குமான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடக்கூடாது என்று எதிர்க்கட்சி கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அந்த விடயத்தில் தாங்களும் உறுதியாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஆளும் கட்சியில் உள்ள ஒரு மக்கள் பிரதிநிதி, ஒரு கட்சியின் தலைவர், கிழக்கு மாகாணத்தை மீட்கப்போகின்றேன் என்று கூறிய கட்சியின் தலைவர் காணி கொள்ளை நடைபெற்றிருந்தால் அதனை வெளிப்படையாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதற்கு மேலாக கடந்த இரண்டு வருடமாக மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக இருக்கின்றார். அவர் மாவட்ட செயலகத்தில் தகவலைப் பெற்று மாவட்ட மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கலாம்.

அத்துடன் அது தொடர்புபட்ட அமைச்சரை தொடர்பு கொண்டு அந்தக் காணிகளை மீட்டு வறிய மக்களுக்கு பிரித்துக்கொடுப்பதே உண்மையான மக்கள் பிரதிநிதியின் கடமையாகும் - எனவும் தெரிவித்துள்ளார்.

# தெற்காசியாவைச் சேர்ந்தவரான ரிஷி சுனக் பிரித்தானியாவை வழிநடத்துவதில் பெருமை

## சந்திரிக்கா வாழ்த்து

பிரித்தானியாவின் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, பிரித்தானியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள ரிஷி சுனக்கிற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், 'கன்சர்வேடிவ் கட்சித் தலைமை மற்றும் பிரித்தானியாவின் பிரதமருக்கான தேர்தலில் வெற்றி பெற்றதற்கு ரிஷி சுனக்கிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சுனக்கின் வெற்றி தெற்காசியாவில் உள்ளவர்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். ஏனெனில் இது பிரித்தானியாவில் ஜனநாயக நிறுவனங்கள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

தெற்காசியாவைச் சேர்ந்த ஒருவர் பிரித்தானியாவை வழிநடத்துவதில் பெருமையடைகிறேன். - எனத் தெரிவித்துள்ளார்.



# பஸில் ராஜபக்ஷவின் சகாக்களை வைத்தே நாடாளுமன்றிலிருந்து அவரை துரத்தினோம்!

## கம்மன்பில பெருமிதம்

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொம்மைகளைப் போன்று ஆட்டி வைக்கும் யுகம் நிறைவுக்கு வந்துள்ளது. பஸில் ராஜபக்ஷவின் சகாக்களைக் கொண்டு , அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி அவரை முழுமையாக நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றியுள்ளதாக பிவிதுரு ஹெலஉருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் விரைவில் கிடைக்கப்பெறும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநர்களிடம் பேச்சுகளை முன்னெடுத்த பின்னரே தம்மால் உதவ முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை முன்னெடுத்த போது சீனா சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைசாத்திடுமாறு கோருகிறது.

இந்தியா எக்டா ஒப்பந்தத்தைக் கோருகிறது. கடன் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு கடன் பெறுவது தீர்வாகாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். அரசாங்கம் இப்போதும் தவறான பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கிறது.

கடன் பெறுவதற்கு பதிலாக முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதற்கு முயற்சிக்காது. காரணம் முதலீடுகளில் இலஞ்சம் பெற முடியாது என்பதனாலாகும். இன்று நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளைப் போன்றே அன்று ரஷ்யா உள்ளிட்ட நாடுகளும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தன.

ஆனால் அவை நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு கடன் பெறவில்லை. மாறாக உற்பத்திப் பொருளாதாரத்தில் அவதானம் செலுத்தின. அவற்றில் வெற்றியும் பெற்றன. எனவே இலங்கை கடன் பெறுவதைத் தவிர்த்து உற்பத்தியில் அவதானம் செலுத்தும் வரை ஒருபோதும் முன்னேறாது. 7 மூளைகளைக் கொண்டவர் என சித்திரிக்கப்பட்ட பஸில் ராஜபக்ஷவிடம் நாட்டின் நிதி நிர்வாகம் கையளிக்கப்பட்ட போது நாடு வீழ்ச்சியடைப் போகிறது என்று நாம் எச்சரித்தோம்.

அன்றிலிருந்து பஸில் ராஜபக்ஷவை மீண்டும் அமெரிக்காவிற்கு அனுப்பும் வரை தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்போம் என்று கூறியமையை இன்று நிறைவேற்றியுள்ளோம். அவரது சகாக்களைக் கொண்டே 22 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றி, நாடாளுமன்றத்திலிருந்து முற்றாக பஸில் ராஜபக்ஷவை வெளியேற்றியுள்ளோம்.

எனவே தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொம்மைகளைப் போன்று ஆட்டி வைக்கும் யுகம் நிறைவிற்கு வந்துள்ளது. அத்தோடு காகத்தின் அரசியல் யுகமும் நிறைவுக்கு வந்துள்ளது. தற்போது காகத்தின் குறைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் யுகத்தையும் நிறைவுக்கு கொண்டு வந்து, முன்னோக்கிச் செல்ல வேண்டும். – என்றார்.

# யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போதைப்பொருள் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்களின் செயற்றிட்டம் ஒன்றிற்காக ஒழுங்கு செய்யப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் அது சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் போதைப்பொருள் ஒழிப்பு, சட்டரீதியான அணுகல்கள், போதைப்பொருள் பாவனையால் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் சட்டத்தரணி எஸ். ரிசிகேசன் மற்றும் ஊடகவியலாளர் நா. குமரன் ஆகியோர் மாணவர்களுக்கான விழிப்புணர்வு உரைகளை நிகழ்த்தியிருந்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சி சார்ந்து மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசுகளாக பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 161**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



சர்வதேச நாடுகளால் - முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியத்தால் - ஸ்ரீலங்கா அரசுக்கு மனிதாபிமானத்துக்கு எதிரான செய்கைகள் அரங்கேறுகின்றன என்றும், அவை நிறுத்தப்பட்டு, அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கு திரும்ப வேண்டும் என்ற அழுத்தங்கள் தரப்பட்டாலும் அவை செவிமடுக்கப்படவில்லை. அதனால் ஜி.எஸ்.டி. வரிச் சலுகைகள் ரத்துச்செய்யப்பட ஆராய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என அறிவிப்புக்கள் வந்தன. எனினும் மஹிந்த மசியவில்லை.

நடந்து கொண்டிருக்கும் போரின் அட்டூழியங்களையும், இடைப்பட்ட மக்களின் மானிடப் பேரழிவுகளையும் நோர்வே அனுசரணையாளர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தமையால், ஐரோப்பிய



நாடுகள் அங்கலாய்ப்புக் கொண்டு, மஹிந்தவை அணுகிய போதும் எதுவிதமான பதில்களும் பிரதிபலிப்புகளும் அவற்றுக்குத் தரப்படவில்லை.

அந்த மனோபாவங்களையும் யுத்த முனைப்பையும் கவனித்த நோர்வே அனுசரணையாளர்களுக்கு வன்னியில் பெரும் பகுதி 2009 இல் காலப்பகுதியில் ஆக்கிரமிக்கப்படலாம் என்ற கருத்துக்கள் இருந்தாலும், மக்கள் இடம் பெயர்ந்து வன்னி பகுதியில் சேர்வதும், விடுதலைப் புலிகள் பெரிய அளவில் எதிர் தாக்குதல்கள் நடத்தாதமையும் பெரும் புதிராக இருந்தன.

புலம்பெயர் ஆதரவாளர்களும், மக்களும் கூட விடுதலைப் புலிகள் உராணுவத்தை முன்னேறி ஆக்கிரமிக்க விடுவது, அவர்களின் வழமையான தந்திரோபாயமும் வியூகமுமே, முன்னைய காலங்களின் யுத்த உத்திகள் போல இராணுவம் உள்நுழைந்ததும் குறிப்பிட்ட பகுதியில் சுற்றி வளைத்து புலிகள் தாக்குவார்கள் எனப் பரபரப்பு செய்திகள் வெளிவந்தன.

**கிளிநொச்சியின் இழப்பும் பொங்கல் தின அறிவிப்பும்**

ஆனால், 2 ஜனவரி 2009 இல் கிளிநொச்சி விழுந்து, மக்கள் அங்கிருந்து உள்நாடி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த புதுக்குடியிருப்பு, முல்லைதீவுப் பகுதிகளுக்கு இடம் பெயர் அப்பிரதேசங்களும் விரைவில் சுருங்கின.

9 ஜனவரி 2009 இல் ஆனையிறவு ஆக்கிரமிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாப் பகுதி தங்களது முழுக் கட்டுப்பாட்டுக்குள் தைப்பொங்கல் தினமான 14 ஜனவரி 2009 இல் வந்து விட்டதாக இராணுவ அறிவிப்புகள் வெளியாகின.

புலம்பெயர் ஆதரவாளர்கள் தெரிவித்துக் கொண்ட வியூக தாக்குதலையோ, விடுதலை புலிகள் கலைந்து கொரில்லாத்



தாக்குதல்களுக்காக வெளிப்படுவதையோ தான் நோர்வே அனுசரணையாளர்கள் எதிர்பார்த்தனர்.

எவை நடந்தாலும், நடக்காமல் விட்டாலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று நிரந்தர சமாதானத்திற்காக தேவை, அதற்கு மேல் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை அரசாங்கம் பொறுப்பெடுத்து சர்வதேசத்துடன் இணைந்து அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அழுத்தங்கள் பல முனைகளில் இருந்தும் எழுந்தன.

கிளிநொச்சியின் வீழ்ச்சியின் பின் ஸ்ரீலங்கா இராணுவம் மூர்க்கத்துடன் முடிவுக்குப் போராட அரசாங்கத் தரப்புகளால் ஊக்கப்படுத்தப்பட்டது.

கட்சி அரசியல் வேற்றுமைகளை களைந்து, பேரினவாதிகள் ஒன்றுபட்டு, பிரபாகரன் அழிக்கப்பட வேண்டும் என்ற கோங்களோடு வலம் வந்தனர். அதேசமயம் விடுதலை புலிகளைச் சுற்றி லட்சத்துக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் கூடியிருந்தனர். அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு புலிகள் கையில் இருந்தது. மக்கள் அவர்களின் கவசமாகவும் இருந்தார்கள். அவர்களிலும் திடமானவர்களைத் திரட்டி, பயிற்சிகள் தந்து, தற்பாதுகாப்புக்கு ஏதுவாக அணிகளாக்கினார்கள்.

இளம்வயதானவர்கள்யாபேரும் விடுதலைப் புலிகளுக்கான பல்வேறு உதவிகளுக்காக வற்புறுத்தப்பட்டு சேர்க்கப்பட்டார்கள். சேர விரும்பியமையும், விரும்பாதமையும், தர்க்கங்களை ஏற்படுத்தி, பிளவுகளும் தண்டனைகளும் நடந்து, மக்களின் சில பகுதியினர் தாங்கள் வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் பலமாகவே முன்வைக்கப்பட்டன.

மக்களும் தங்களோடு கூட இருக்க, தாங்கள் ஏதோ விதத்தில் சர்வதேச உதவி வரும்வரைத் தாக்குப் பிடிக்கலாம் என்று நம்பிக்கையும் விடுதலைப் புலிகளுக்கு இருந்தது. மக்களோ இந்தியா தங்களைக் கைவிடாது என வானத்தை நோக்கி தினமும் கைகுப்புவதை தவிர வேறு எதுவும் செய்ய முடியாதவர்களானார்கள்.

மக்கள் விடுதலைப் புலிகளை சூழ்ந்து இருந்து, இராணுவத்திற்கு சங்கடங்களைத் தந்து, அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்தாலும், ஸ்ரீலங்கா அரசாங்கமோ எவ்வித இழப்புகளும் தாங்கள் தீர்மானித்துக் கொண்ட பாதையைக் கட்டுப்படுத்தக் கூடாது என்ற முனைப்பையே படை அணிகளின் தளபதிகளுக்கு விடுத்தனர்.

தான் வெற்றியை நோக்கி இவ்வளவு தூரம் வந்து, வடக்கின் பெரும் பகுதியையும் பெற்றுக் கொண்டதன் பின், தன்னை அமெரிக்காவோ இந்தியாவோ கட்டுப்படுத்தப் போவதில்லை என்ற இறுமாப்பு மஹிந்தருக்கும்,இந்தியாவுடன்இணைந்து போர் நிலைகளை அவதானித்த அவரது குழுவுக்கும் இருந்தது. போர் மேகங்கள் தொடர்ந்தன.

**தொடர்ந்த சமர்களும் இடர்களும்**

02 ஜனவரி 2009இல் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் இருந்த கிளிநொச்சி விழுந்ததும் போர் முடிவு வெகு தூரத்தில் இல்லை என்ற நிதர்சனம் அவதானிக்கப்பட்டது.

இதற்குக் குறுக்கே நின்றவர்கள், விடுதலைப் புலிகளைச் சூழ்ந்து நின்ற, இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்களே.

மானிடப் பேரழிவுகள் நிகழக்கூடியமையெள அப்பகுதிகளில் இயங்கிக் கொண்டிருந்த ஐ.நா. அமைப்புக்களும் மனித உரிமை நிறுவனங்களும் சர்வதேசத்துக்கு அறிவித்ததின் எதிரொலியாக அப்படியான எல்லா சர்வதேச அமைப்புகளையும் ஐ.நா. உட்பட போர் வலயப் பகுதியில் இருந்து வெளியேற ஸ்ரீலங்கா அரசு காலக்கெடு விதித்தது மட்டுமல்லாமல், அவை வெளியேறுவதையும் கண்காணித்தது. தாங்கள் தொடரப் போகும் தீவிரத் தாக்குதல்களால் அந்த அமைப்புகளின் அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்புத் தருவது முடியாது என்பதே சொல்லப்பட்ட காரணம். இந்த அமைப்புகள் யாவும், ஐ.நா. பணியாளர்கள் கூட வெளியேறுவது, தங்களை நிர்கதியாக விட்டுச் செல்வதாக மக்கள் அந்தரித்தமைக்கு மேலாக, விடுதலைப் புலிகளும் பாதிக்கப்பட்ட மக்களை தவிர.



தாங்களும் தனிமைப்படுத்தப்படுகிறோம் என உணர்ந்து, சர்வதேச நாடோ, புலம்பெயர் அமைப்புகளோ, ஏதும் வழி செய்தால் ஒழிய, தங்களால் வெகு நாள்களுக்குத் தாக்குப்பிடித்து இராணுவத்தைக் கட்டுப்படுத்தலாம் என எண்ணவில்லை.

ஆகவே மக்கள் தம்மை விட்டு வெளியேறுவதை விடுதலை புலிகள் விரும்பவில்லை.

(வளரும்.....)

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தியாவில் பண்டிகைக் கால ஷொப்பிங்கில் பெரும் எழுச்சி; அது மீட்சிக்கான அடையாளம்

## கொவிட் நெருக்கடிக்குப் பிந்தைய மீட்சிக்கான சமிக்ஞை



கொவிட் நெருக்கடிக்குப் பிந்தைய பொருளாதார அதிர்ச்சிகள் மற்றும் மாறிவரும் உலகளாவிய புவி – அரசியல் கட்டமைப்புச் சிக்கல்களை இந்தியா வெற்றிகரமாகத் தாண்டி வர முடிந்துள்ளது.

இந்தியாவில் பண்டிகைக் கால ஒப்பிங்கை நுகர்வோர் முழு சக்தியுடன் ஈடுபட்டு பயன்படுத்தியுள்ளனர்.

நகைகள் முதல் ஆடைகள், ஓட்டோமொபைல்கள்(வாகனங்கள்) என அனைத்தையும் விற்பனை செய்யும் கடைகள் மற்றும் ரோரூம்கள் தீபாவளி பண்டிகைக்கு முந்தைய நாள்களில் விற்பனையில் கணிசமான அதிகரிப்பை பதிவு செய்திருக்கின்றன.

மைக்ரோ பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஆகிய இரண்டிற்கும் இன்றியமையாததாக இருக்கும் ஒட்டோமொபைல் துறையின் நிலை, இந்தியாவின் பொருளாதார ஆரோக்கியத்தை அளவிடுவதற்கான ஒரு நல்ல குறிகாட்டியாகும். மேலும் அனைத்து அறிகுறிகளும் மேல்நோக்கிய போக்கையே சுட்டிக்காட்டுகின்றன.

இந்தியாவில், இந்த பண்டிகைக் காலத்தில் வாகனத் தொழில் அதிக வளர்ச்சி விகிதங்களைப்பதிவுசெய்தது.

இந்திய ஓட்டோமொபைல் விற்பனையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு (ய்பும்பு) கருத்துப்படி, இந்த ஆண்டு நவராத்திரி பண்டிகையின் போது நாட்டின் மொத்த வாகன சில்லறை விற்பனை 57 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுநவராத்திரியின்போது 3,42,459 யூனிட்கள் விற்பனை செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5 வரை மொத்த வாகன சில்லறை விற்பனை 5,39,227 ஆக உள்ளது.

தரவுகளின்படி, ஓட்டோமொபைல் துறையின் ஒவ்வொரு வகையும் மிக உயர்ந்த வளர்ச்சியைக் காட்டியது, இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், வணிக வாகனங்கள் மற்றும் பயணிகள் வாகனங்கள் முறையே 52 சதவீதம், 115 சதவீதம், 48 சதவீதம் மற்றும் 70 சதவீதம் விற்பனை அதிகரித்துள்ளது.

மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு, வாடிக்கையாளர்கள் தங்கள் ஷோரூம்களில் புதிய செட் வீல்களை வாங்கத் தயாராகிவிட்டமையால் ஓட்டோமொபைல் துறையின் தலைவர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.



விலைமதிப்பற்ற உலோகங்கள் மீதான இந்தியாவின் கேள்வி இன்னும் அதிகமாகவே உள்ளது. நாடு முழுவதும் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி வர்த்தகர்கள் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக விற்பனையைக் காண்கின்றனர்.

பண்டிகைக் காலத்தில் பொதுவாக தங்கம், வெள்ளி மற்றும் வைரங்களின் விற்பனை அதிகமாக இருக்கும். ஏனெனில் பெரும்பாலான இந்தியர்கள் ஆண்டின் இந்த நேரத்தில் இது போன்ற கொள்முதல்களை மங்களகரமானதாகக் கருதுகின்றனர். இந்த ஆண்டு அதற்கு வேறுபட்டதாக இல்லை.



வாடிக்கையாளர்கள் அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள். தங்க நகைகளின் விலை இந்தியப் பணத்தில் 50,000 ரூபாய் (607 அமெரிக்க டொலர்) வரம்பிற்குள் உள்ளது. மக்களைப் பொறுத்தவரை, இந்த விலை தங்கம் வாங்குவதற்கான வாய்ப்பாகும். மேலும் விலை வரம்பு காரணமாக மக்கள் உற்சாகமாக உள்ளனர் என்று அகில இந்திய ஜெம்ஸ் மற்றும் ஜுவல்லரி டோமெஸ்டிக் கவுன்ஸிலின் தலைவர் ஆஷிஷ் பெத்தே கூறுகிறார்.

தொழில்துறை கணிப்புகளின்படி, ஒன்லைன் மற்றும் ஸ்டோர் சில்லறை விற்பனை இந்த ஆண்டு 27 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 2019 ஐ விட இருமடங்காகும். முந்தைய ஆண்டை விட சுமார் 25 சதவீதம் அதிகமாகும்.

அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT) படி, 2019 இல் 8.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், விற்பனை புள்ளிவிவரங்கள் ஓவ்லைன் விற்பனையில் கிட்டத்தட்ட 15.2 பில்லியன் அமெரிக்க டாலர்களை உள்ளடக்கும்.

எந்தவொரு தேசத்தின் கொவிட் சிகிச்சைக்குப் பிந்தைய மீட்பு நிலை பொதுவாக அதன் மக்கள் தொகையின் விருப்பமான செலவுப் பழக்கத்தால் அளவிடப்படுகிறது.

மேல்நோக்கி மொபைல் போக்கில் ஆர்வமுள்ள இந்தியர் இப்போது விடுமுறை நாள்களிலும் பயணத்திலும் செலவிடுகிறார்கள். விடுமுறையில் இருக்கும்போது ஷொப்பிங் செய்ய விரும்புகிறார்கள். இது மீள்தன்மையுடன் இருக்கும் பொருளாதாரத்தையும் மற்றும் நுகர்வு முறைகள் நெகிழ்ச்சியுடன் இருப்பதையும் காட்டுகிறது. இந்தியா வணிகத்திற்காக திறந்தே உள்ளதையும் காட்டுகின்றது.

(மூலம்:ஏ.என்.ஐ.)





காலைக்கதிர் Kalaikkathir

# சைவத்துக்கும் தமிழுக்கும் கட்டியம் கூறிய முப்பெரும் விழா

**கலாபூசணம்.மேழிக்குமரன்**

சைவத்தமிழ் மூதறிஞர் கலாபூசணம் சைவப்புலவர் செல்லத்துஷ்ர், மறைந்த ஓராண்டு நினைவு விழா, அவரது திருவுருவச்சிலை திறப்பு விழா, சைவப்புலவரால் உருவாக்கப்பட்ட திறந்தவெளி அரங்கான ஏழூர் அரங்கு புனரமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு ஆகிய மூன்று நிகழ்வுகள் ஒன்றிணைந்த விழா, யாழ்ஃஇளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் அதிபரும், சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் உபதலைவருமான இ.கணேசானந்தன் அவர்களின் தலைமையில் 22.10.2022 சனிக்கிழமை அன்று யாழ்/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தினர் விழாவை ஒழுங்கு செய்திருந்தனர்.

அதிகாலைப் பொழுதில் மேகமூட்டம் இருளாகக் காணப்பட்டது. விழாக் குழுவினருக்கும் மக்களுக்கும் மழை வந்து குழப்பிவிடுமோ என்ற கவலை இருந்தது. ஆனால் எட்டு மணிக்கெல்லாம் மேகங்களை கிழித்துக்கொண்டு சூரியன் தனது கதிர்களால் ஒளிவீசி விழாவை சிறப்புறச் செய்தான்.

ஒன்பது மணிக்கு விழா ஆரம்பமானது. வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். யாழ்/போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

விருந்தினர்கள் மங்கல வாத்தியம் முழங்க மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டனர். தேசியக்கொடியும், பாடசாலைக் கொடியும், அறக்கட்டளையின் கொடியும் ஏற்றப்பட்டன. தேசியகீதமும், பாடசாலை கீதமும் பாடப்பட்டன. பாடசாலையின் நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ்/போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணரும், யாழ்/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும், சைவப்புலவர் செல்லத்துரையின் மாணவனுமாகிய த.பேரானந்தராசா, கலாபூசணம் சைவப்



புலவர் சு.செல்லத்துரையின் திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார். சைவப்புலவரின் மகன் மாவிரதன் முதல் மாலையை அணிவித்தார். பின்னர் பலரும் மாலைகள் அணிவித்து, மாலைகள் நிறைந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

சைவப்புலவரின் சகோதரி திருமதி செல்வமணி இராசேந்திரம், திருவுருவச் சிலைக்கு முதல்சுடரை ஏற்றி வைத்தார். பின்னர் உறவினர்கள் சுடர்களை ஏற்றி வணங்கினர். அதனை தொடர்ந்து மலரஞ்சலி இடம் பெற்றது.

விருந்தினர்கள் ஏழூர் அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவ்வேளை பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் அழைத்து செல்லப்பட்டமை கண்கொள்ளாக் காடசியாக இருந்தது. மாணவிகளின் மயில்நீலநிற உடை அலங்காரமும், நடன அசைவுகளும் அனைவரையும் கவர்ந்தன.

பாடசாலையில் 1987 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரத்தில் படித்து இப்போது தாயகத்திலும், புலம்பெயர்ந்தும் வாழும் மாணவர்கள் இணைந்து சைவப்புலவரால் நிர்மாணிக்கப்பட்ட 'ஏழூர்அரங்கு' என்ற பெயர்கொண்ட திறந்தவெளி அரங்கை அழகுறப் புனரமைத்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தனர். அந்த அரங்கிலேயே விழா நடைபெற்றது.

விருந்தினர்கள் மங்கல விளக்கேற்ற,



திருமுறை ஓதலுடன் விழா ஆரம்பமானது. நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் செ.உ.சந்திரகுமாரன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தனதுரையில் 'மூன்று நிகழ்வுகளுக்குமாக வருகை தந்தவர்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆற்றிய பன்முகப் பணிகளை வெளிக் கொண்டுவரவும், அவற்றை தொடர்ந்து முன்னெடுக்கவும், அவரது சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கவும் என பல்துறைசார் அறிஞர்கள், இளைஞர்களை உள்வாங்கி அவரின் பெயரில் அறக்கட்டளை நிதியம் தொடங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

அருட்தந்தை எ.எட்விநாதன் அடிகளார் ஆசியுரை வழங்கினார். அவர் தனது ஆசியுரையில் 'நாம் மனிதர்களாக உங்கள் முன்னால் உயர்ந்து நிற்க இந்தப் பாடசாலைதான் காரணம். எமது பாடசாலையை தேசியமட்டம் வரை பேசப்படும்வகையில் உயர்த்தியவர் அதிபர் செல்லத்துரை அவர்கள். இவர் இளவாலையின் அடையாளம். தனித்துவமான பல ஆளுமைகளைக் கொண்ட எங்கள் அதிபருக்கு சிலை வைப்பது சாலப் பொருந்தும்' என்றார்.

'சைவப்புலவர் புகழ் இங்குமட்டுமல்ல உலகெங்கும் பரவியுள்ளது. ஆசிரியப் பணி, சைவப்பணி, சமூகப்பணி, தமிழ்ப் பணி என பல்துறைகளில் தனது முத்திரையை பதித்தவர். அதிபர் என்றால், ஆசிரியர் என்றால், தொண்டன் என்றால் எப்படி இருக்க வேண்டும் என நடை, உடை, பாவனைகள் மூலம் வாழ்ந்து காட்டியவர் சைவப்புலவர்' என நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தனது ஆசியுரையில் குறிப்பிட்டார்.

கலாநிதி ஆறுதிருமுருகன் வாழ்த்துரை வழங்கினார். அவர் தனதுரையில் ' உலகெங்கும் வாழுகின்ற மாணவர்களும், இங்குள்ள மாணவர்களுமாக சைவப்புலவரிடம் மாணவர்களாக இருந்தவர்கள் நடத்தும் நன்றிப் பெருக்குக்குரிய விழாவாக இதனைப் பார்க்க முடிகின்றது. கிராமத்து ஆசிரயர்கள்தான் ஆசிரியத்துவத்தை அர்ப்பணிப்புடன் செயற்படுத்துபவர்கள். அதற்கு சைவப்புலவர் சிறந்த உதாரணம். இவர் ஒரு நடமாடும் கல்விக்கழகம். கல்விப்பணிப்பாளராக பதவிஉயர்வுவந்தபோது அதனை மறுத்து, எனது ஊர் மாணவர்களுக்கு மெய்கண்டானிலேயே பணியாற்றுவேன் என்னை விட்டுவிடுங்கள் என்று கூறிய பெருமகன்' என்று கூறினார்.

யாழ்/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் அதிபரும், சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் உபதலைவருமான இ.கணேசானந்தன் தலைமையுரை ஆற்றினார். அவர் தனதுரையில் –

'சைவமும் தமிழும் தழைத்தோங்க உழைத்த அதிபர் செல்லத்துரை அவர்கள் மிகச்சிறந்த பன்முக ஆளுமையாளன். அவருக்கு சிலை நிறுவியதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம். இந்தப் பாடசாலையை சைவப்புலவரின் பாடசாலை என்று சொல்லுமளவிற்கு அவர் பாடசாலையுடன் ஒன்றி வாழ்ந்தவர். இருபத்திநான்கு ஆண்டுகள் அவரின் அதிபர் சேவையை எமது பாடசாலை பெற்று பெருமை தேடிக் கொண்டது' என்று தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த.) மாணவர்களால் புனரமைக்கப்பட்ட 'ஏழூர் அரங்கு' அவர்களால் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. அவர்களது அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி நன்றி மடல் ஒன்று அறக்கட்டளையின் ஆலோசகர்களான கலாபூசணம் அருந்தவராஜா (மேழிக்குமரன்), சி.சுமந்திரன் ஆகியோரினால் கையளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

சைவப்புலவரின் பன்முக ஆளுமைகளை உலகறியச் செய்யுமுகமாக அவரின் ஞாபகார்த்தமாக 'தமிழ் வித்தகர்' விருது ஆண்டுதோறும் ஒருவருக்கு வழங்குவதென அறக்கட்ளை தீர்மானித்தது. அதற்கமைய இந்த ஆண்டு சைவப்புலவரின் ஆசிரியப் பணியைக் கௌரவிக்கும் முகமாக நல்லாசான் கி.யோசேப்பு அறக்கட்டளையின் உறுப்பினர்கள், ஆலோசகர்கள் புடைசூழ 'தமிழ் வித்தகர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கி.யோசேப்புவை, அறக்கட்டளையின் செயலாளர் நா.சுகந்தன் அறிமுகம் செய்து வைத்தார்.

அத்தோடு சைவப்புலவரின் திருவுருவச்சிலையை வடிவமைத்த சிற்பாசாரியார் மா.மனோகரும் அறக்கட்டளையின் தலைவர் த.தயானந்தனால் அறிமுகம் செய்யப்பட்டு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

'அதிபர் செல்லத்துரை எமது பாடசாலைக்கு வந்தபோது நான் படித்த வகுப்பினருக்கு வில்லிசை பழக்கி மேடையேற்றினார். எங்களுக்கு பத்துக் கட்டளைகளை கூறி வைத்துள்ளார். அதன்படி வாழ்ந்தால் நாம் பண்புள்ள மனிதர்களாக வாழமுடியும்' என கௌரவ விருந்தினர் யாழ்/போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா தனதுரையில் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினரான, வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவீந்திரன் தனதுரையில் –

'சைவப்புலவர், தமிழ்த்தினப் போட்டிகளில் நடுவராகப் பலமுறை பணியாற்றியுள்ளார். ஆளுமை மிக்க அறிவுப் பொக்கிசம். அவரின் ஞாபகார்த்தமாக



நடத்தப்பட்ட போட்டிகள் சிறப்பான நடுவர் குழுவால் நடத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சிபெற இவர்கள் நடத்திய போட்டிகள் ஊக்கமளித்தன.' எனத் தெரிவித்தார்.

தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புத் தொகை அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.

'ஜப்பான் கல்வியில் உயர்ந்ததன்



பின்னணி என்ன? சைவப்புலவரின் சிந்தனைகளை, சைவத்தை, தமிழை வளர்க்க அறக்கட்டளை அமைத்துச் செயற்படுவது காலத்தின் தேவை. பாராட்டுதற்குரியது. பெற்றோர் பிள்ளைகளின் வளர்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்' என பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

சித்தாந்தரத்தினம் வே.கனகசபாபதி 'சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் சைவ ஆளுமை' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

அவர் தனதுரையில் –

'சைவப்புலவர் சொல்லும், வாழ்வும் ஒன்றென வாழ்ந்து காட்டியவர். நாமெல்லாம் இணைந்து தலயாத்திரைகளை மேற்கொண்டபோது சைவப்புலவர் ஓர் இளைஞனைப் போல இருந்து எங்களுக்கு வழிகாட்டியவர். தனது காலத்தில் திருமந்திர எழுச்சியை உருவாக்கியவர். அதனால்தான் திருமூலரின் குருபூசை அன்று இறைபதம் அடைந்தார். அவர் எழுதிய நூல்களில் பதினெட்டு நூல்கள் சைவசமயம் சார்ந்தவை. அவர் மேற்கொண்ட பணிகளைத் தொடர்வதே எமது பணியாகும்.' எனத் தெரிவித்தார்.

'திருமந்திரத்தில் உள–ஆன்மீக பரிணாம வளர்ச்சிக்கான அடிப்படைகள்' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப்புலவர் சி.றமணராஜா நினைவுப் பேருரை ஆற்றினார்.

அவர் தனதுரையில் –

'நாங்கள் எல்லோரும் சைவப் புலவர்கள்தான். ஆனால் சைவப்புலவர் என்றால் அது செல்லத்துரை அவர்களையே சாரும். எங்கள் அனைவருக்கும் மணியாக அவர் விளங்குவதால் அவரை சைவப்புலவர்மணி என்று அழைப்பதே பொருந்தும். அவர் நல்லாசிரியர், சைவ சித்தாந்த அறிவு நிரம்பியவர். சிறந்த சொற்பொழிவாளர். திருமந்திர ஈடுபாடுடையவர்.

அலோபதி வைத்தியம் என்னும் ஆங்கில வைத்தியத்துக்கு அடிப்படையாகத் திகழ்வன எமது சைவ இலக்கியங்களே. திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள மருத்துவச் செய்திகளை நாம் அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்ல வேண்டும். திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள அட்டாங்க யோகம் முக்கியமானது. திருமந்திரத்திலுள்ள 3048 பாடல்களுமே எமக்கு வழிகாட்டிகள்.

உளவியல், வானவியல், யோகவியல், வாழ்வியல் என அனைத்தையும் சொன்னவர் திருமூலர். வாழ்வியலில் உடல் உறவைக்கூட அழகாக எடுத்துரைத்துள்ளார்' என்று தெரிவித்தார்.

சைவப்புலவர் ஞாபகார்த்தப் போட்டிகளில் முதற்பரிசு வென்ற இயல், இசை, நாடக போட்டியாளர்களின் நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டு அனைவரதும் பாராட்டைப் பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. செயலாளரின் நன்றியுரையுடன் விழா இரண்டு மணிக்கு இனிதே முடிவுற்றது. விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

## முதல் பெண்மணி .........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம் மாநாட்டில், பாலினச் சிறப்புப் பேச்சுக்களும், ஆய்வுக்கட்டுரை வாசிப்புக்களும் இடம்பெறவிருக்கின்றன. இந்த நிகழ்வில் பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், கல்விசார் - கல்வி சாரா ஊழியர்கள், வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான ஆலோசகர்கள், பெண் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பணியாளர்கள், யாழ். சமூக செயற்பாட்டு மைய பணியாளர்கள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றுப் பரவலாக்கத்தின் பின்னரான புதிய இயல்பு நிலையில் மாற்றத்தைச் செமுமைப்படுத்துவதற்காக, பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்துடன் இணைந்து பாலின சமத்துவத்துக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த ஆய்வு மாநாட்டை நடத்துகின்றது.

இந்த ஆய்வு மாநாடு பாலினம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு அனுபவப் பகிர்வுக்கான பயனுள்ள களமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, பாலின சமத்துவமின்மையின் வெவ்வேறு பரிமாணங்கள் மற்றும் அது தொடர்பான கற்றல் மற்றும் செயற்பாட்டுக்கான உலகளாவிய உரையாடலை வலுப்படுத்துவதனூடாக சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமையான மாற்றங்கள் பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் இந்த மாநாடு வழிசெய்யும் என நம்பப்படுகிறது.

பல்கலைக்கழகம் ஒரு சமூக நிறுவனம் என்பதால் அது சமூகத்தோடு இணைந்து சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், பாலினம் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர்களை வலுவூட்டுவதிலும் அக்கறை செலுத்துகின்றது. அதன் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையமானது பால்நிலை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான அறிவை வெளிப்படுத்துவதற்காக ஓர் ஆய்வு மாநாட்டை ஐரோப்பிய ஒன்றிய நிதி அனுசரணையுடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சீ.டி.எல்.ஜி செயற்றிட்டம் மற்றும் யாழ் சமூக செயற்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்துகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், பல்கலைக்கழகத்தில் சட்டத்துக்குப் புறம்பான பாகுபாடு மற்றும் துன்புறுத்தலை அகற்றுவதற்கும், அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்கள் மற்றும் கல்வி கற்கும் மாணவர்களின் உரிமைகள் மதிக்கப்படுகின்ற, வேலை புரிவதற்கும், கற்றலுக்குமான கண்ணியமான சூழலை உருவாக்குவதன் ஊடாகப் பல்கலைக்கழகத்தில் ஆண், பெண் இருபாலாரும் தங்கள் முழுத் திறனை அடைவதற்கான சமத்துவத்தை ஊக்குவிக்கின்றது.

மேலும், பல்கலைக்கழகத்தில் கற்பித்தல், கற்றல் ஆராய்ச்சி மற்றும் தொழில் புரிவதற்கான சிறந்த சூழலை உருவாக்கி பாலினப் பிரச்சினைகளில் விழிப்புணர்வை வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது. பல்கலைக்கழகத்துக்குள்ளே மட்டுமல்லாமல் அது சார்ந்த சமூகத்திலும் பல விழிப்புணர்வு மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

## 3,அரசியல் கைதிகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அவர்களது ஒப்புதல் வாக்குமூலங்கள் அவர்களால் சுயாதீனமாக வழங்கப்பட்டவை அல்ல என்று தீர்மானித்த நீதிமன்றம் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து அவர்களை நேற்று விடுதலை செய்தது.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முற்பகுதியில் கைது செய்யப்பட்ட தங்கவேல் சிவகுமார் (வயது 47), எட்வர்ட் சாம் சிவலிங்கம் (வயது 49), சீலன் ஆனந்தராஜா (வயது 45) ஆகியோரே நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

காலிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் இவர்கள் 2006 இல் கைது செய்யப்பட்டனர். அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவர்களுக்கு எதிரான ஆதாரமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 16 வருடங்களின் பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் சுயாதீனமாக வழங்கப்படவில்லை என நீதிமன்றம் தீர்மானித்து, மூவரையும் விடுவித்து இருக்கிறது.

## சிறையில் இருக்க .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமைக்கு, கடந்த காலங்களில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள்தான் காரணம். தற்பொழுது மக்கள் இவ்வாறு கஷ்டத்திலும் துன்பத்திலும் வாழ்ந்து வருகின்றனர். பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவு தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும். பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்த பொருளாதார நெருக்கடியை உருவாக்கிய ராஜபக்ஷ குடும்பத்தினர்கள் தொடர்ந்தும் காப்பாற்றப்பட்டு கொண்டு இருக்கின்றார்கள்.

சீனி மோசடி, உர இறக்குமதியில் மோசடி இவ்வாறு மோசடியில் ஈடுபட்டவர்கள் தற்பொழுது அமைச்சர்களாக உள்ளனர். இவர்களுக்கு எதிராக விசாரணை செய்யப்பட்டு இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். - என்றார்.

## பொலிஸ் அலுவலர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் சிக்கிய வானைச் செலுத்திச் சென்ற நபர், அதில் பயணித்த மேலும் நால்வர் மற்றும் ஓட்டோவில் இருந்த இருவர் உட்பட அனைவரும் தெஹியத்தகண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

எனினும் வானைச் செலுத்திச் சென்ற நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 51 வயதுடைய புருத்தகஸ்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து தொடர்பில் தெஹியத்தகண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெடுக்குநாறி, .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றுள் தமிழ் மக்களின் வரலாற்றுத் தொன்மைமிகு குருந்தூர்மலை, வெடுக்குநாறி ஆலயம் தொடர்பான விவகாரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த இரண்டு அமைச்சர்களும் அங்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவே, திருகோணேஸ்வர ஆலயத்திற்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் நேரடியாக சென்று, ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தினை சம்பந்தப்பட்ட தரப்புக்களின் சம்மதத்துடன் அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடுப்பில் இருந்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் சபையின் ஏற்பாட்டாளர் வணக்கத்துக்குரிய கல்வெவ சிறிதம்ம தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மீள மக்கள் அலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டையும் மக்களையும் அரசு அடக்கி ஆள்கிறது. மக்களை நடுத் தெருவில் தள்ளிவிட்டு அடக்குமுறைக்கிறது. நாட்டை நாசம் செய்கிறது .கோட்ட குடும்பத்துக்கு சேவை செய்கிறது. இதுதான் ரணில் அரசின் சேவை.

நாட்டை மீட்டெடுத்த மக்களை நடு வீதியில் தள்ளி, மாணவத் தலைவர்களையும் மதத் தலைவர்களையும் கைது செய்து சிறையில் தள்ளியுள்ளது. இதை இப்படியே விடப் போவதில்லை. இதற்கு முற்று புள்ளி விரைவில் வைப்போம்.

மற்றுமொரு மக்கள் அலையை நவம்பரில் இருந்து ஆரம்பிப்போம். இதற்கான முதல் கட்டம், கொழும்பில் எதிர்வரும் வரும் மாதம் 2 ஆம் திகதி தெரியும்.

நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. சிறையில் தள்ள முடியாது. இந்த அரசுக்கு சரியான பாடம் புகட்டுவோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் நீக்க வேண்டும். கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள், போராட்ட உறுப்பினர்கள், தேரர் உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட வேண்டும். - என்றார்.

## இரு பஸ்கள் நேருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் ஒன்று மற்றுமொரு அரச பஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்த தனியார் பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 38 பேர் மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 05 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வைத்தியசாலைவட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேகாலை மொலகொட பிரதேசத்தில் வசிக்கும் 67 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.










காலைக்கதிர் Kalaikkathir

# யார் ஆட்சிப்பீடம் ஏறினாலும் நானும் நிமலும் அமைச்சர்கள்!

## சாமர சம்பத் தசநாயக்க

எவர் என்ன கூறினாலும் யார் ஆட்சிக்கு வந்தாலும் அடுத்த நாடாளுமன்றத்தில் நிமல் சிறிபால டி சில்வாவும் தானும் அமைச்சர்கள் என ஆரம்ப கைத்தொழிற்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் உப தலைவருமான சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளை புஹாலே பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நேரத்தில் என்ன நடந்தது?. அவர்கள் சஜித் பக்கம் சென்றனர். நாங்கள் ரணில் பக்கம் நின்றுகொண்டோம். என்னை விட சிரேஷ்ட தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இங்கும் இருக்கின்றார்.

அவருக்கு பின்னால் இருந்த தலைவர் (டிலான் பெரேரா) பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளராகவும் இருந்தார். பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் ஆளும் கட்சியின் பிரதான செயலாளராகவும் இருந்தார்.

அமைச்சு பதவியை எதிர்பார்த்து ஊடகங்களுக்கு செவ்விகளை வழங்குவார். எனினும் அமைச்சு பதவி கிடைக்கவில்லை. அண்மையில் எமது சங்கத்தின் கூட்டத்திற்கு வந்து, சாமரவும் நிமலும் ரணி லிடம். நாங்கள் எதிர்க் கட்சியில். – என்றார். சிவனொளிபாத மலைக்கு அவர்கள் அந்த பக்கமாக ஏறுகின்றனர். நாங்கள் இந்த பக்கமாக ஏறுகிறோம். இறுதியில் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஒன்று சேருவார்கள். இறுதியில் இரண்டு தரப்பினரும் ஐக்கிய தேசியக்கட்சியிலேயே இணைவார்கள்.



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தற்போது இருக்கும் குதிரைகளில் நன்றாக ஓடக்கூடிய மூன்று குதிரைகளே இருக்கின்றன. மைத்திரிபால சிறிசேன பொலன்நறுவையில் நன்றாக ஓடுகிறார்.

நிமல் சிறிபால டி சில்வா உட்பட நன்றாக ஓடக்கூடிய குதிரைகள் எங்களிடம்.

தயாசிறி ஜயசேகர பொய் கூறி, ஏதாவது விசர்த்தனங்களை செய்து, குருணாகலில் வென்று விடுவார். அடுத்தது யார் ஷான் விஜேலால். அப்படியானால் சுதந்திரக்கட்சியில் இந்த மூன்று குதிரைகளே நன்றாக ஓடக்கூடிய குதிரைகள்.

எங்களிடம் நிமல், துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண, ஜகத் புஷ்பகுமார போன்ற நன்றாக ஓடக்கூடிய குதிரைகள் இருக்கின்றன. நானும் நன்றாக ஓடுவேன். அமரவீரவும் நன்றாக ஓடக்கூடிய குதிரை.

எனினும் அவர்கள் மூன்று பேரும் ஓடட்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் நிமல் சிறிபால டி சில்வாவும் சாமரவும் அமைச்சர்கள். அதில் எந்த மாற்றமும் இல்லை.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் துள்ளினாலும் அவர்களால் 113 பெரும்பான்மை பலத்தை பெற முடியாது. அது 100 இற்கு நூறு வீதம் நிச்சயம் எனவும் சாமர சம்பத் தசநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.


NFlash Super Detergent

வேலை வாய்ப்புக்கள்

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

கணணி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# ஜனாதிபதிப் பதவியில் விலகியதால் இரத்த அழுத்தம் குறைந்துள்ளதாம்!

## கோட்டாபய கூறுகிறார்



ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய தனக்கு தற்போது உயர் இரத்த அழுத்தம், கொழுப்பு மற்றும் இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கூறிய இந்த விடயத்தை முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச, இரத்தினபுரியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் சுகவீனம் குணமடைந்துள்ள போதிலும் அவர் எடுத்த முடிவுகளை சரியான நேரத்தில் எடுக்காத காரணத்தால், நாட்டு மக்களுக்கு தற்போது நோய்கள் ஏற்பட்டுள்ளன எனவும் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

# கஞ்சாவை சட்டபூர்வமாக்குகின்றமை நாட்டின் கலாசாரத்திற்கு எதிரானது!

## திஸ்ஸ அத்தநாயக்க கருத்து

கஞ்சாவை சட்டபூர்வமாக்கும் அதிகாரிகளின் நடவடிக்கையை எதிர்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மருத்துவ நோக்கங்களுக்காகக் கஞ்சாவை வளர்ப்பதற்கான சட்டத்தை உருவாக்கவுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி அறிவித்துள்ளார்.

கஞ்சா ஆயுர்வேத சட்டத்தின் கீழ் வருவதால், பொழுதுபோக்கு நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நிதி நலன்களின் அடிப்படையில் மாத்திரம் அதிகாரிகள்



தீர்மானங்களை எடுக்க முடியாது என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது அந்நியச் செலாவணியை கொண்டுவரும் என்றாலும், இலங்கையின் கலாசாரத்திற்கு எதிரானது என்பதால், இந்தப் பிரேரணைக்கு உடன்பட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.10.2022இல் வெளியிடப்பெற்றது.